WILL of GOD
316

## நான் தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்வது எப்படி?

*"நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்."* ரோமர் 12:2

தேவனுடைய சித்தத்தை அறிவதும், அதன்படி செய்வதும் மிகவும் முக்கியம். இயேசுவைப் போல வாழுங்கள். இயேசு தாம் பூமிக்கு வந்ததின் நோக்கத்தைப் பற்றி, *"என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்" என்றார்.* யோவான் 6:38. தேவனுடைய சித்தம் பெரும்பாலும் எல்லா விசுவாசிகளுக்கும் ஒன்றுபோல பொருந்தும். ஆனாலும், விசுவாசிகள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட தேவசித்தமும் உண்டு, அனுதினமும் அவரோடு சேர்ந்து உண்மையுடன் நடக்கும்போது, அதைப் படிப்படியாக அவர் வெளிப்படுத்துகிறார். தேவ சித்தத்தை நீங்கள் அறிந்துகொள்ள முடியும். அதற்கு தேவையான புரிதலை அவர் கொடுக்கிறார். *"உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்."* நீதிமொழிகள் 3:5-6. எல்லா விசுவாசிகளுக்கும் பொதுவான தேவனுடைய சித்தத்தை வேதாகமத்திலிருந்து அறியலாம். அவரவருக்கான தனிப்பட்ட சித்தத்தை அவரது வார்த்தைக்கு முரண்படாமல் உண்மையுடன் வாழும்போது அறிந்துகொள்ளலாம். அந்தக் கீழ்ப்படிதலை அடிப்படையாக வைத்து, அவரது சித்தம் இன்னதென்று உணர்ந்து, நமக்கான அவரது சித்தப்படி நடக்கலாம். பிதாவிடம் கேளுங்கள். அவரது வார்த்தை, அவரது ஞானம், அவரது சமாதானம் மற்றும் அவரது மக்களிடமிருந்து வழிநடத்துதலைப் பெறுங்கள். தேவ சித்தத்தை அறிந்துகொண்டவுடன், அவருக்குக் கீழ்ப்படியுங்கள்.

**தேவனுடைய பொதுவான சித்தம்.** தேவனுடைய பொதுவான சித்தத்தை பெரும்பாலும் வேதாகம கட்டளைகளிலும், கோட்பாடுகளிலும், உதாரணங்களிலும் காணலாம். உங்கள் வாழ்க்கைக்கான தேவ சித்தத்தை அறிந்துகொள்வதற்கு முதன்மையான ஆதாரம் வேதாகமம். *"உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது,"* சங்கீதம் 119:105.

1. கட்டளைகள். எல்லா விசுவாசிகளுக்கும் பொதுவான அநேக கட்டளைகள் வேதாகமத்தில் உள்ளன, உதாரணமாக, *"எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது,"* 1 தெசலோனிக்கேயர் 5:16-18. மேலும், *"நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிரு(ங்கள்),"* 1 தெசலோனிக்கேயர் 4:3. *"நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்," என்று இயேசு சொன்னார்,* யோவான் 14:15. அந்தக் கட்டளைகள் சொல்லப்பட்ட சூழலைப் புரிந்துகொள்ளுங்கள். நோவாவிடம் தேவன் ஒரு பேழையைக் கட்டும்படி சொன்னார். ஆதியாகமம் 6:14. தேவன் உங்களிடம் அதைச் செய்யச் சொல்லவில்லை. தாவீதிடம் தேவன் எபிரோனுக்குப் போகும்படி சொன்னார், 2 சாமுவேல் 2:1. தேவன் உங்களிடம் அதைச் செய்யச் சொல்லவில்லை. ஒரு கட்டளையை அதன் சூழலைவிட்டுப் பிரித்துப் பார்க்கக்கூடாது.

2. கோட்பாடுகள். நாம் பின்பற்றவேண்டிய வேதாகம கோட்பாடுகளும் உண்டு. சிறந்த உக்கிராணத்துவத்திற்கான கோட்பாடு லூக்கா 16:1-13 இல் உள்ளது. சீஷத்துவத்திற்கு செலுத்த வேண்டிய விலையைப் பற்றி லூக்கா 14 ஆம் அதிகாரத்தின் இறுதியில் காணலாம். இரட்சிக்கப்படாதவர்களைத் தேடுவது பற்றிய கோட்பாடு லூக்கா 15ம் அதிகாரத்தின் மூன்று உவமைகளில் உள்ளது. வேதாகமத்தில் உள்ள இந்த கோட்பாடுகளையும், பிற கோட்பாடுகளையும் பின்பற்றுங்கள்.

3. உதாரணங்கள். நம் வாழ்க்கைக்கான தேவனுடைய பொதுவான சித்தம் வேதாகமத்தின் கட்டளைகளிலும் கோட்பாடுகளிலும் காணப்படுவதாகப் பார்த்தோம். நாம் பின்பற்ற வேண்டிய உதாரணங்களும் வேதாகமத்தில் உள்ளன. அதற்கு இயேசுவின் வாழ்க்கைதான் மிகச்சிறந்த உதாரணம். இயேசு சீஷர்களின் பாதங்களைக் கழுவிய பிறகு, *"நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்," என்று சொன்னார்.* யோவான் 13:15. நாம் அவரது தாழ்மையின் உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும், பிலிப்பியர் 2:3-5. நாம் அவரது அடிச்சுவடுகளில் நடக்க வேண்டும், *"இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்,"* 1 பேதுரு 2:21. *"நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம். அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்,"* 1 யோவான் 2:5-6.

**ஓர் எச்சரிப்பு.** தேவன் பொய்யுரையாதவர், சங்கீதம் 119:160. தம்முடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாதபடி அவர் உங்களை நடத்தமாட்டார், அவ்வாறு சொல்லவுமாட்டார். நம்முடைய பக்திவிருத்திக்காக இயேசு தலைவர்களைக் கொடுத்திருக்கிறார், எபேசியர் 4:11-14. ஆனாலும், அநேக கள்ளப்போதகர்கள் இருக்கிறார்கள், 2 தீமோத்தேயு 4:3-4. தம்முடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டாமென தேவன் சொல்லுவதாகச் சொன்னால் நம்பவே நம்பாதீர்கள். தேவன் அவ்வாறு செய்யமாட்டார். சபைத்தலைவர், தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டாமென உங்களிடம் சொன்னால், அது ஒரு கள்ளப் போதனை.

**தேவனுடைய தனிப்பட்ட சித்தம்.** தேவனிடத்தில் விசுவாசிகளுக்கான தனிப்பட்ட சித்தமும் உண்டு, சங்கீதம் 32:8, நீதிமொழிகள் 3:5-6. தேவனுடைய பொதுவான சித்தத்திற்குக் கீழ்ப்படியுங்கள். பிறகு அவருடைய தனிப்பட்ட சித்தத்தைப் புரிந்துகொள்ள, அது என்னவென அவரிடம் ஊக்கமாகக் கேளுங்கள். அதற்கான பதிலை அவரது வார்த்தை, அவரது ஞானம், அவரது மக்கள், அவரது சமாதானம் ஆகியவற்றில் தேடுங்கள்.

**கேளுங்கள்**. தாவீதைப்போல, *"உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும்," என்று ஜெபியுங்கள்.* சங்கீதம் 143:10. கொலோசெய விசுவாசிகள் *"அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்பட," வேண்டுமென பவுல் அப்போஸ்தலன் ஜெபித்தார்.* கொலோசெயர் 1:9. தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதன்படி செய்ய வேண்டும் என்பதே உங்களையும் மற்றவர்களையும் குறித்து உங்களுடைய ஊக்கமான ஜெபமாக இருக்க வேண்டும்.

**வழிநடத்தலைப் பெறுங்கள்.** தேவன் தம்முடைய தனிப்பட்ட சித்தத்தை அவரது வார்த்தை, அவரது ஞானம், அவரது மக்கள், அவரது சமாதானம் மூலமாக வெளிப்படுத்துகிறார். தேவன் தம்முடைய சித்தத்தை உங்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமெனக் கேளுங்கள். உங்களுடைய ஜெபங்களுக்கு பின்வரும் வழிகளில் அவர் பதிலளிப்பார்:

1. அவருடைய வார்த்தை. வேத ஆராய்ச்சியை வழக்கமாக்குவதன் விளைவாக தேவனுடைய தனிப்பட்ட சித்தத்தை அறிந்துகொள்ளலாம். அவரது வார்த்தையிலிருந்து ஞானத்தையும் புரிதலையும் பெறும்போது உங்களைக் குறித்த தேவ சித்தம் தெளிவாகிறது. தம்முடைய வார்த்தைக்கு முரணாக எதையும் செய்ய அவர் உங்களை வழிநடத்தவே மாட்டார்.

2. அவருடைய ஞானம். ஆவிக்குரிய கீழ்ப்படிதலால் தேவனுடைய ஞானத்தைப் பெறுகிறோம், 1 கொரிந்தியர் 2:14-15. *"நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்,"* ரோமர் 12:2. தேவன் தம்முடைய ஞானத்தை உங்களுக்குத் தரும்படி கேளுங்கள், *"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், ... கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்,"* யாக்கோபு 1:5.

3. அவருடைய மக்கள். தேவ சித்தத்தைப் புரிந்துகொள்வதற்கான ஓர் ஆதாரமாக தேவ மக்கள் இருக்கிறார்கள். அவரது வார்த்தையை உள்ளபடியே பேசுகிறவர்கள் அல்லது எழுதுகிறவர்கள் அதற்கு உதவ முடியும், கொலோசெயர் 1:28. முதிர்ச்சியடைந்த விசுவாசிகளிடமிருந்து ஆலோசனை பெறுவது நல்லது. ஒன்றுக்கு மேற்பட்டவர்களிடம் ஆலோசனை கேட்பது நல்லது, *"ஆலோசனையில்லாமையால் எண்ணங்கள் சித்தியாமற்போம்; ஆலோசனைக்காரர் அநேகர் இருந்தால் அவைகள் உறுதிப்படும்,"* நீதிமொழிகள் 15:22. முதிர்ச்சியடைந்த விசுவாசிகளிடம் குறைகளே இருக்காது என்றல்ல, ஆனால் தேவ சித்தத்தை நீங்கள் கண்டுபிடிப்பதற்கு அர்த்தமிக்க நுணுக்கங்களை அவர்கள் உங்களுக்கு வழங்க முடியும்.

4. அவருடைய சமாதானம். தேவனுடைய சித்தத்தை இறுதியாக உறுதிப்படுத்துவது அவரது சமாதானம்தான், *"தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது,"* கொலோசெயர் 3:15. *"அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்,"* பிலிப்பியர் 4:7. ஜெபம் செய்து, வேதாகமத்தை ஆராய்ந்து, ஆவிக்குரிய ஞானத்தையும், முதிர்ந்த ஆவிக்குரிய ஆலோசகர்களிடமிருந்து நுணுக்கங்களையும் பெற்ற பிறகு எடுக்கிற முடிவு சரிதான் என்கிற ஓர் ஆழமான உணர்வை தேவன் கொடுப்பதால் இந்தச் சமாதானம் உண்டாகிறது. அவரது சமாதானத்தைத் தேடுங்கள், காத்திருங்கள்.

**செயல்படுங்கள்.** ஒரு காரியத்தில், இது உம் சித்தம்தானா? என்று நீங்கள் கேட்கும்போது, பவுலிடம் சொன்னதுபோல "இல்லை" என்று அவர் சொல்லலாம், 2 கொரிந்தியர் 12:7-10. "காத்திரு" என்று சொல்லலாம். "காத்திரு" என்று அவர் பதிலளித்தால், மிகப்பெரிய ஆசீர்வாதம் உண்டாகக் கூடும், ஏசாயா 40:31. "ஆம்" என்பது தேவனுடைய சித்தமாக இருந்தால், அது கடினமாக, விரும்பத்தகாததாக அல்லது அதிக விலைமதிப்புள்ளதாக இருந்தாலும், அவரது சித்தத்தைச் செய்யுங்கள். அவரது சித்தத்தை மனதாரச் செய்வதில் நாம் மகிழ்ச்சியடைய வேண்டும், சங்கீதம் 40:8, எபேசியர் 6:5-6. கிறிஸ்தவ மார்க்கத்தின் பெயரில் போதிக்கப்படுகிற போலியான பதில்களைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். தேவ சித்தத்தை உறுதியாக அறிந்த பிறகே அதைச் செய்யுங்கள்.

---

*தேவனுடைய சித்தத்தை நான் அறிந்துகொள்வது எப்படி?* © 2026 ஜான் டி. மோரிஸ் III, இது ஆக்ட்ஸ் ஒன் எய்ட் அமைப்பால் வெளியிடப்பட்டது. இந்த முழு புத்தகத்தையும்பொருளடக்கத்தை மாற்றாமல் தாராளமாக அச்சிடலாம், நகலெடுக்கலாம், பதிவிடலாம், மின்னஞ்சல் செய்யலாம் அல்லது செய்தியாக அனுப்பலாம். முதல் பக்கத்தின் மேல்பகுதியில் உங்கள் ஊழியம் அல்லது சபையின் பெயரையோ, அல்லது சின்னத்தையோ சேர்த்துக்கொள்ளலாம், மேலும் இரண்டாம் பக்கம் கீழ்ப்பகுதியிலுள்ள தடிமனான கோட்டிற்கு மேல் உங்கள் தகவல்தொடர்பு விபரத்தைச் சேர்க்கலாம். WillofGod316.org என்பது வேதாகமத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. விசுவாசிகள் தேவனுடைய சித்தத்தைக் கண்டறிய உதவுவதற்காக இது உருவாக்கப்பட்டது. ஆக்ட்ஸ் ஒன் எய்ட் அமைப்புக்கு (முடிந்தால் ஆங்கிலத்தில்) மின்னஞ்சல் அனுப்பலாம்: Hello@Mail316.org. மொழிபெயர்ப்பு சேவைகளை வழங்கியவர்கள் www.ChristianLingua.com. *நான் தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்வது எப்படி?* என்கிற இந்த புத்தகம் நாற்பத்தெட்டு மொழிகளில் www.WillofGod316.org இல் இலவசமாகக் கிடைக்கிறது. இந்த மொழிபெயர்ப்பில் உள்ள வேதாகம மேற்கோள்கள் *தமிழ் பரிசுத்த வேதாகமம் - பழைய பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.*